From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 59/2018

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : சங்கிலிராஜ் | Father/Husband Name | : மாரிமுத்து |
| Age | : | Calling | : |
| Date | : 17.06.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 17 day of 06.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் ஒத்தக்கடை பக்கத்தில் யானைமலை குவாரியில் குடியிருந்து வருகிறேன். தற்போது பால் வியாபாரம் செய்கிறேன், இதற்கு முன் கல் உடைக்கும் தொழில் செய்து வந்தேன், அசா1 தனசேகரனை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி எனது ஊர்க்காரர் என்பதால் தெரியும், அசா1ம் நானும் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவர் என்பதால் எனக்கு பழக்கம். சுமார் 15 வருடத்திற்கு முன்பு ஆயுதபூஜை அன்று அசா1 தனசேகரன் மகன் சாமி கும்பிட என்னை அழைத்தார். சாமி கும்பிட்டுவிட்டு வந்தவர்கள் சிலரை ஒத்தக்கடை பஸ் ஸ்டாப்பில் இறக்கிவிடுவதற்காக காரில் ஏற்றி சென்றார். அப்போது அசா1ன் வீட்டிற்கு வெளியில் அவருடைய காருக்கு பக்கத்தில் சுமார் 4, 5 பேர்கள் வந்து அசா1 தனசேகரன் மற்றும் அவரது மகனை சத்தம் போட்டார், அப்போது நான் அசா1 தனசேகரன் வீட்டில் இருந்தேன். நான் பார்த்தபோது சுமார் 4, 5 பேர்கள் கையில் கம்புடன் வந்து அசா1 மற்றும் மகனுடன் சண்டை போட்டுக்கொண்டு இருந்தார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(எதிரி ஆஜர், எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிரிதரப்பு குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை**

**செய்யவில்லை, குறுக்குவிசாரணை இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது )**